RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt25111

OPEN ACCESS

# பத்தொன்பதாம் நூற்றாண்டுத் திருக்குறள் பதிப்புக்களில் குறட்பா வடிவம்

ஆ. மணி [அ, *], மு. கவிதா [ஆ,*]

[அ] தமிழ்த்துறை, பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி, புதுச்சேரி, இந்தியா

[ஆ] தமிழ்த்துறை, ஸ்ரீ எஸ்.இராமசாமி நாயுடு ஞாபகார்த்தக் கல்லூரி, சாத்தூர், இந்தியா

# Kural Form in Thirteenth Century Tirukkural Editions

A. Mani [a], M. Kavitha [a, *]

[a] Department of Tamil, Bharathidasan Govt. College For Women Women's college in Pondicherry, India

[b] Department of Tamil, Sri S. Ramasamy Naidu Memorial College, Sattur-626203, Tamil Nadu, India

* Corresponding Author: mkavitha@srnmcollege.ac.in

Received: 18-08-2024
Revised: 02-01-2025
Accepted: 11-01-2025
Published: 27-01-2025

**ABSTRACT**

The field and site of this discourse is to explain the position of the second couplet, the first chapter of Thirukkural Biography, published in the nineteenth century editions. The Tirukkural editions of the nineteenth century have been taken as the basis for this effort. Where applicable, later editions have also been compared. Now let us see how the nineteenth century Tirukkural editions have visualized the second couplet beginning with "Katrathana Laaya".

**Keywords:** Thirukkural, Thirteenth Century, Kural, Tirukkural Editions

## உரைக்களம்

திருக்குறள் பாயிரவியலின் முதல் அதிகாரமாகிய கடவுள் வாழ்த்தின் இரண்டாம் குறட்பா பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பதிப்புக்களில் பதிப்பிக்கப்பட்டுள்ள நிலையை விளக்குவது இவ்வுரையின் களமும் தளமும் ஆகும். இம்முயற்சிக்கு பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளிவந்த திருக்குறள் பதிப்புக்கள் அடிப்படைகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. பொருந்துமிடங்களில் பிற்காலப் பதிப்புக்களும் ஒப்புநோக்கப்பட்டுள்ளன. இனி, "கற்றதனா லாய" எனத் தொடங்கும் இரண்டாம் குறட்பாவைப் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் திருக்குறள் பதிப்புக்கள் எவ்வாறு காட்சிப்படுத்தியுள்ளன என்பதைக் காணலாம்.

## பதிப்புக்களில் குறட்பா வடிவம்

திருக்குறள் பதிப்புக்களில் குறட்பா பெற்றுள்ள வடிவத்தை அறிவது பதிப்பாசிரியர் / உரையாசிரியர்களின் யாப்பறிவு / யாப்புக்கொள்கை, பதிப்புக்கொள்கை, சீர் / சந்திப் பிரிப்பு முறைகள் ஆகியவற்றை அறிய உதவுவதோடு, காலந்தோறும் குறட்பா அச்சிடப்பட்ட முறையை அறியவும் உதவும். மேலும், அக்காலப் புலவர்களின் கல்விநிலை, வாசிப்பு வரலாறு, ஒரு குறட்பா காலந்தோறும் கற்கப்பட்டநிலை ஆகியவற்றையும் உணர்த்தும் என்பதால், அதனைக் காணலாம். 18, 19ஆம் நூற்றாண்டுப் பதிப்புக்கள் (அவற்றுள்ளும் கிடைத்தவை) மட்டுமே இவண் கருதப்பட்டுள்ளன என்பது நினையத்தக்கது.

திருக்குறள் பதிப்புக்களில் தற்போது கிடைக்கும் பதிப்புக்களில் காலப்பழமையுடைய பதிப்பாகிய என்.இ. கிண்டர்ஸ்லியின் (1794: 51 - 82) ஆங்கில மொழிபெயர்ப்புப் பதிப்பில் திருக்குறள் பாக்களின் தமிழ் வடிவம் இடம்பெறவில்லை. 1803இல் வெளிவந்த கமரெர் செய்த ஜெர்மன் மொழிபெயர்ப்பிலும் திருக்குறள் பாக்களின் தமிழ் வடிவம் இடம்பெறவில்லை. எனவே, அக்காலத்தில் வழங்கிய வடிவத்தை அறிய இயலவில்லை.

திருநெல்வேலி அம்பலவாண கவிராயர் பதிப்பில் (1812: 2*)

"கற்றதனாலாயபயனென்கொவாலறிவ

னற்றாடொழாஅரெனின்" (குறள் 2)

என்றவாறு இடைவெளிகளில்லாமல் இக்குறட்பா அமைந்துள்ளது. முதலடி ஈற்றுச் சீர் மட்டும் தனியே பிரித்துக் காட்டப்பட்டுள்ளது. இதன்மூலம், அக்காலத்தில் சுவடிகளில் இருப்பதுபோலப் பதிப்பித்தாலும், அக்கால மக்கள் அதனைப் புரிந்துகொள்வர் எனப் பதிப்பாசிரியர் கருதியுள்ளதை உணரமுடிகின்றது.

பதிப்பாண்டு அறியப்படாத (1812 எனப் பலரும் 1819 எனச் சிலரும் வேறு ஆண்டுகளைச் சிலரும் குறித்துள்ளனர். அவை பொருத்தமுடைய கருத்துக்களன்று. காண்க: விரிவுக்கு: ஆ. மணி 2018: 1 - 192) எல்லீசரின் (..: 4) திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பில்,

"கற்றதனாலாயபயனென்கொவாலறிவ

னற்றாடொழாஅரெனின்" (குறள் 2)

என்றவாறு இடைவெளிகளில்லாமல் அமைந்துள்ளது.

1831இல் சென்னபட்டணம், சர்ச்மிசியோன் அச்சுக்கூடத்தில் தாண்டவராய முதலியாராலும், முத்துச்சாமிப் பிள்ளையாலும் பதிப்பிக்கப்பட்ட திருவள்ளுவமாலையும் திருக்குறள் மூலமும் நாலடி நானூற்றின் மூலமும் என்னும் பதிப்பின் கடவுள் வாழ்த்துப் பக்கம் கிடைக்கவில்லை. அதனால், அப்பதிப்பின் குறட்பா வடிவம் குறித்து ஏதும் கூற இயலவில்லை.

1840இல் துறு பதிப்பித்த திருக்குறள் அறத்துப்பால் முதல் 24 அதிகாரங்கள் மட்டும் கொண்ட பதிப்பில் குறட்பா வடிவம் எல்லீசர் பதிப்பில் உள்ளவாறு சீர்களிடையே இடைவெளிகளில்லாமல் அமைந்துள்ளது. 2018இல் துறு பதிப்பினை நிழற்பட ஆய்வுப் பதிப்பாக மீள்பதிப்புச் செய்த ஆ. மணி (2018: 67) பதிப்பிலும், 2020இல் திருத்திய மீள்பதிப்பினைச் செய்த ஆ. மணி (2020: 67) பதிப்பிலும் இவ்வடிவம் 1840 பதிப்பில் உள்ளவாறே அமைந்துள்ளது.

1842இல் அப்பாசாமி முதலியார் செய்த "திருவள்ளுவமாலை திருக்குறண் மூலம்" என்னும் பதிப்பிலும் எல்லீசர் பதிப்பில் உள்ளவாறே குறட்பா அமைந்துள்ளது.

1847இல் சோமசுந்தர வுபாத்தியாயர் (1847: 3*) செய்த திருக்குறள் மூலமும் திருத்தணிகைச் சரவணப்பெருமாளையரால் செய்யப்பட்ட தெளிபொருள் விளக்கம் என்னும் பதிப்பில்,

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ

னற்றா டொழா அரெனின்" (குறள் 2)

என்றவாறு முதலடியானது முச்சீர் போலவும், இரண்டாமடியின் அளபெடைக்குரிய அகரம் மூன்றாம் சீரிலும் உள்ளன என்பது குறிக்கத்தக்கது.

1850இல் களத்தூர் வேதகிரி முதலியாரின் திருக்குறள் உரையைப் பதிப்பித்த முத்துக்கிருஷ்ண பிள்ளை (1850:2*) பதிப்பில் சோமசுந்தர வுபாத்தியார் பதிப்பில் உள்ள வடிவமே உள்ளது. எனினும், " கற்றதனாலாய" என்ற முதற்சீர் மட்டும் "கற்றதனா லாய" என இரு சீர்களாக உள்ளது.

1856இல் கரோலா கிரவுள் செய்த ஜெர்மன் மொழிபெயர்ப்பில் திருக்குறள் பாக்களின் தமிழ் வடிவம் இடம்பெறவில்லை.

1861இல் திருக்குறள் பரிமேலழகர் உரையை முழுமையாகப் பதிப்பித்த ஆறுமுக நாவலர் (1861:3*) பதிப்பில்

“கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ

னற்றா டொழாஅ ரெனின்” (குறள் 2)

என்ற வடிவம் இடம்பெற்றுள்ளது. இப்பதிப்பில் அளபெடைக்குரிய அகரம் இரண்டாம் சீரில் இணைந்துள்ளது அறியத்தக்கது.

1861 இல் திரிசிரபுரம் கந்தசாமி (1861: 47*) பிள்ளை பதிப்பித்த திருத்தணிகை சரவண பெருமாளையர் உரைப்பதிப்பில் குறட்பா வடிவம் ஆறுமுக நாவலர் (1861) பதிப்பில் உள்ளவாறு உள்ளது. எனினும், பயனென் கொல் என இரு சீர்போல உள்ளது.

1865 இல் கரோலா கிரவுளின் (1865: 3) இலத்தீன் மொழிபெயர்ப்புப் பதிப்பில் தமிழ் வடிவமும், தமிழ் உரையும் தரப்பட்டுள்ளன. குறட்பா வடிவம் சோமசுந்தர வுபாத்தியாயரின் 1847ஆம் ஆண்டுப் பதிப்பினை ஒத்துள்ளது. எனினும், ‘கற்றதனாலாய’ என்பது ஒரு சீர் போலவும், ’டொழா அரெனின்’ என்பதில் அளபெடை மூன்றாம் சீரிலும் உள்ளன.

1871இல் சார்லஸ் இ. கோவர் பதிப்பித்த தென்னிந்திய நாட்டுப் பாடல்கள் தொகுப்பில் திருக்குறளின் தமிழ் வடிவம் இல்லை.

1873இல் வெளிவந்த தரங்கம்பாடிப் (1873: 2) பதிப்பில்,

“கற்றதனாலாய பயனென் கொல்வாலறிவ

னற்றாடொழா அரெனின்” (குறள் 2)

என்றவாறு முதலடி முச்சீர் போலவும், ஈற்றடி இரு சீர் போலவும் உள்ளமை குறிக்கத்தக்கது.

1873இல் வந்த ஈ.ஜெ. இராபின்சன் செய்த தமிழ் விஸ்டம் என்னும் பெயரிய ஆங்கில மொழிபெயர்ப்புப் பதிப்பில் திருக்குறளின் தமிழ் வடிவம் இல்லை.

1875ஆம் ஆண்டைய ஆறுமுக நாவலரின் இரண்டாம் பதிப்பில் (1875: 3*) உள்ள வடிவம் முதல் பதிப்பினைப் (1861:3*) பின்பற்றியுள்ளது.

1878இல் தி. சபாபதி பிள்ளை வெளியிட்ட சரவண பெருமாளையர் உரைப்பதிப்பில் உள்ள வடிவம் ஆறுமுக நாவலரின் முதல் பதிப்பினைப் (1861:3*) பின்பற்றியுள்ளது. சரவண பெருமாளையர் உரைப்பதிப்புக்களில் காலப்பழமையுடைய பதிப்பான சோமசுந்தர வுபாத்தியாயரின் பதிப்பிலிருந்து இது வேறுபடுவது நினையத்தக்கது.

1883இல் செந்நீர்க் குப்பம் கன்னியப்ப முதலியார் திருக்குறள் மூலபாடப் பதிப்பில் உள்ள குறப்பா வடிவம் 1873ஆம் ஆண்டைய தரங்கம்பாடிப் பதிப்பினைப் போன்றுள்ளது.

1885இல் ஊ. புஷ்பரதச் செட்டியார் பதிப்பித்த திருக்குறள் பரிமேலழகர் உரை, லாசரஸின் ஆங்கில மொழிபெயர்ப்பு ஆகியவற்றோடு கூடிய பதிப்பு, ஆறுமுக நாவலரின் பதிப்புக்களைப் (1861, 1875) பின்பற்றி அமைந்துள்ளது.

1885இல் ஈ.ஜெ. இராபின்சன் வெளியிட்ட தென்னிந்திய கதைப்பாடல்களும் பாடல்களும் என்னும் நூலில் திருக்குறளின் தமிழ் வடிவம் தரப்படவில்லை.

1886இல் ஜி.யூ. போப் வெளியிட்ட திருக்குறள் பதிப்பில் உள்ள குறட்பா வடிவம், ஆறுமுக நாவலரின் பதிப்புக்களைப் (1861,1875) பின்பற்றி அமைந்துள்ளது.

1889இல் சுகாத்தியர் (1889:10) தம் உரையுடன் வெளியிட்ட திருக்குறள் உரைப் பதிப்பில்,

”மற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ

னெற்றாடொழா அரெனின்” ( குறள் 2)

என்றவாறு குறட்பா திருத்தியமைக்கப்பட்டுள்ளது அறியத்தக்கது. எதுகை, மோனைத் திருத்தம் கொண்டதாகச் சுகாத்தியர் வெளியிட்ட இப்பதிப்பு வெண்பாவுக்குரிய யாப்பமைதி நோக்கிய பதிப்பா என்பது மேலும் ஆராய்தற்குரியது.

1893இல் வி. சுந்தர முதலியார் (1893: 1*) வெளியிட்ட திருக்குறள் கருத்துரைப் பதிப்பில் உள்ள வடிவமும் ஆறுமுக நாவலரின் பதிப்புக்களைப் (1861, 1875) பின்பற்றி அமைந்துள்ளது.

1899இல் வாலாஜாப்பேட்டை அ. ஷண்முகப்பச் செட்டியார் (1899:1*) பதிப்பித்த சரவண பெருமாளையர் உரைப்பதிப்பில்,

"கற்றதனாலாய பயனென் கொல்வாலறிவ

னற்றா டொழா அறெனின்" (குறள் 2)

என்றவாறு உள்ளது. இது தரங்கம்பாடிப் பதிப்பை ஒத்திருந்தாலும், 'அரெனின்' என்றிருக்க வேண்டிய ஈற்றுச்சீர் 'அறெனின்' என்றிருப்பது அச்சுப்பிழை எனத் தோன்றுகின்றது.

இனி, திருக்குறள் உரைக்களஞ்சியங்களைச் செய்தளித்த ச. தண்டபாணி தேசிகரின் பதிப்புக்களைக் காணலாம்.

"கற்றதனா லாய பயன்என்கொல் வாலறிவன்

நற்றாள் தொழாஅர் எனின்" (குறள் 2)

என்பது ச. தண்டபாணி தேசிகரின் (1950: 8) பதிப்பில் இடம்பெற்றுள்ள குறட்பா வடிவம்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்

நற்றா டொழாஅ ரெனின்" (குறள் 2)

என்பது ச. தண்டபாணி தேசிகரின் (1981: 35*) பதிப்பில் இடம்பெற்றுள்ள குறட்பா வடிவம். ஒருவர் செய்த முதற்பதிப்பு பிற்காலத்தில் மீண்டும் பதிப்பிக்கப்படும்போது சீரமைதி கூட மாற்றம் பெறுவது அறியத்தக்கது. இவ்வகை மாற்றங்கள் பதிப்பாசிரியர்தம் கருத்து மாற்றங்களை விளக்குவனவாக அமைந்திருப்பது குறிக்கத்தக்கது.

## முடிவுரை

இதுகாறும் கண்டவற்றிலிருந்து 19ஆம் நூற்றாண்டுப் பதிப்புக்கள் யாப்புப் புணர்ச்சியைப் போற்றியபோதும், பல பதிப்புக்களில் சீரமைதி போற்றப்படவில்லை என்பதும், 20ஆம் நூற்றாண்டுப் பதிப்புக்களில் சந்திப் பிரிப்புமுறை கைக்கொள்ளப்பட்டுள்ளதும் தெளிவாகின்றன. சந்திப்பிரிப்பில் கூட 1950 ஒரு வகையாகவும் (மிக எளிய நிலையிலும்), 1981இல் மற்றொரு வகையாகவும் (சற்று இறுகிய நிலையிலும்) ஒரு பதிப்பாசிரியரே விளங்கியுள்ள உண்மை புலனாகின்றது. காலம் செல்லச் செல்லத்தான் சந்தி பிரிப்பானது மிக எளிய நிலையை நோக்கிச் செல்வது இயல்பானது. ஆனால், இங்கோ, அது எதிர் நிலையில் செயல்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

## References

ஆறுமுக நாவலர். யாழ்ப்பாணம். (பதி.ஆ.). (1861 துன்மதி, வைகாசி). தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் அருளிச்செய்த தமிழ்வேதமாகிய திருக்குறண்மூலமும் பரிமேலழகருரையும். சென்னபட்டணம்: வாணிநிகேதன வச்சுக்கூடம்.

ஆறுமுக நாவலர். யாழ்ப்பாணம். (பதி.ஆ.). (1875 யுவ, ஆடி). தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் அருளிச்செய்த தமிழ்வேதமாகிய திருக்குறண்மூலமும் பரிமேலழகருரையும். சென்னபட்டணம்: வித்தியாநுபாலன யந்திரசாலை.

கந்தசாமி பிள்ளை. தி. (பதி.ஆ.). 1861 (துர்மதி ஆனி). திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையைக்கொண்டியற்றிய பதவுரையும் கருத்துரையும் விசேடவுரையும்; திருவள்ளுவ மாலை மூலமும் உரையும் சரித்திரமும் திருத்தணிகைக் கந்தப்பையர் குமாரர் சரவணப்பெருமாளைய ரவர்களால் பரிசோதித்தபடி. இலஷ்மி விலாச அச்சுக்கூடம்.

கந்தசாமி முதலியார். பூவிருந்தவல்லி (பதி.ஆ.). 1883. திருவள்ளுவநாயனார் அருளிச் செய்த சரித்திரமும் மாலையும் திருக்குறள் மூலபாடம் / இவை திருத்தணிகை சரவணப்பெருமாளையர் முன்பதிப்பித்த பிரதிக்கிணங்கப் பதிப்பிக்கப்பட்டது. செந்நீர்குப்பம்: கமலாலய விலாச அச்சுக்கூடம்.

சபாபதிப் பிள்ளை. தி. (பதி.ஆ.). 1878. தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரருளிச் செய்த திருக்குறள் மூலமும் / இதற்குப் பரிமேலழகருரையைக் கொண்டியற்றிய பதவுரையும், கருத்துரையும், விசேடவுரையும், திருவள்ளுவமாலை மூலமும் உரையும் சரித்திரமும் ஆகிய இவை திருத்தணிகை கந்தப்பையர் குமாரர் சரவணப்பெருமாளையரவர்களால் முன்பரிசோதித்த பிரதிக்கிணங்கப் பதிப்பிக்கப்பட்டது. சிந்தாதிரிப்பேட்டை: மட்டுவார் குழலாம்பாள் அச்சுக்கூடம்.

சிதம்பரம் கருணானந்தசுவாமிகள் (பதி.ஆ.). 1893. தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் அருளிச்செய்த திருக்குறள்: இதற்கு பரிமேலழகருரையைக் கொண்டியற்றிய பதவுரையும் கருத்துரையும் விசேடவுரையும் திருவள்ளுவமாலை மூலமும் உரையும் சரித்திரமும். [சென்னை]: சிந்தாத்திரிப்பேட்டை நாராயணசாமி முதலியார் அண்டுசன்; பிரபாகர அச்சுக்கூடம்.

சிதம்பரம்பிள்ளை. வ.உ. 1917 (நூல் முன்னுரைக் குறிப்பு). திருக்குறள் - மணக்குடவருரை - அறத்துப்பால். சென்னை: வ.உ.சிதம்பரம் பிள்ளை.

சோமசுந்தர உபாத்தியாயர் (பதி.ஆ.). 1847 (பிலவங்க, புரட்டாசி). தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரால் அருளிச்செயப்பட்ட திருக்குறள் மூலமும் / இதன் பலவுரைகளினுஞ் சிறந்த பரிமேலழகருரை வாக்கியங்களுள் பலர்க்கும் பயன்படற்குரிய பலவுந் தழுவி வெளிப்படையாக்கித் திருத்தணிகைக் கந்தப்பையர் குமாரர் சரவணப்பெருமாளையரால் செயப்பட்ட உரையாகிய தெளிபொருள் விளக்கமும் திருவள்ளுவமாலையுரையும். சென்னப்பட்டணம் : பாரதிவிலாச அச்சுக்கூடம்.

தரங்கம்பாடி இ.எல்.எம். பிரஸ் (பதி.ஆ.). 1873. குறள் மூலமும் உரையும் - இதிலே அறத்துப்பாலும் பொருட்பாலும் அடங்கியிருக்கிறது. தரங்கம்பாடி: இ.எல்.எம். பிரஸ்.

தாண்டவராய முதலியார் & முத்துசாமிப்பிள்ளை (பதி.ஆ.). 1831. திருவள்ளுவமாலையும் திருக்குறண் மூலமும் நாலடி நானூற்றின் மூலமும். சென்னபட்டணம்: சர்ச் மிசியோன் அச்சுக்கூடம்.

துறு ஐயர் (பதி.ஆ.). 1840. திருவள்ளுவர் செய்த குறளின் அறத்துப்பாலில் இல்லறம் - உயசு - அதிகாரமும் அவற்றிற்குப் பரிமேலழகர் செய்த இலக்கணவுரையும் இயற்றமிழாசிரியராகிய இராமாநுச கவிராயர் செய்த வெள்ளுரையும் புத்துரையும் துறு ஐயர் செய்த இங்கிலீஸ் மொழிபெயர்ப்பும். சென்னை: அமெரிக்க மிசியோன் அச்சுக்கூடம்.

பொன்னுசாமி முதலியார் (பரிசோ. ஆ.). 1842 (சுபகிருது வைகாசி). திருவள்ளுவமாலை திருக்குறள் மூலம். ஆமுல்லைவாயில்: நீதிசாரவிளக்க அச்சுக்கூடம்.

மணி. ஆ. (பதி.ஆ.) 2020 (முதல் பதிப்பு). திருக்குறள் - துறு பதிப்பு - தொகுதி 1. புதுச்சேரி: தமிழன்னை ஆய்வகம்.

மணி. ஆ. 2015 (முதல் பதிப்பு). திருக்குறளின் முதற்பதிப்பாசிரியர் யார்?. புதுச்சேரி: தமிழன்னை ஆய்வகம்.

மணி. ஆ. 2018 (முதல் பதிப்பு). திருக்குறள் : எல்லீசரின் மொழிபெயர்ப்பு. புதுச்சேரி: தமிழன்னை ஆய்வகம்.

மணி. ஆ. 2020 (முதல் பதிப்பு). திருக்குறள் முதல் பதிப்பு. புதுச்சேரி: தமிழன்னை ஆய்வகம்.

மணி.ஆ.(பதி.ஆ). (2018 (முதல் பதிப்பு)). திருக்குறள் பரிமேலழகரின் இலக்கணவுரையும் இராமாநுச கவிராயரின் புத்துரையும் துறு ஆங்கில மொழிபெயர்ப்பும் (முதல் இருபத்து நான்கு அதிகாரங்கள் மட்டும்). புதுச்சேரி: தமிழன்னை ஆய்வகம்.

ரோஜா முத்தையா நூலகம் (பதி.ஆ.). (2016 (மீள்பதிப்பு)). திருக்குறள் மீள்பதிப்பு. சென்னை: ரோஜா முத்தையா நூலகம்.

வீராசாமி பிள்ளை. மை. (பதி.ஆ.). 1875 (யுவ, புரட்டாசி). தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரால் அருளிச்செய்யப்பட்ட திருக்குறள் மூலமும்: இதன் பல உரைகளிலும் சிறந்த பரிமேலழகருரையைக் கொண்டியற்றிய பதவுரையும் கருத்துரையும் விசேடவுரையும் திருவள்ளுவமாலை மூலமும் உரையும் சரித்திரமும். [சென்னை]: மனோன்மணி விலாச அச்சுக்கூடம்.

வேதகிரி முதலியார். களத்தூர். (உரைஆ.). 1850 (சாதாரண பங்குனி). திருவள்ளுவ நாயனாரருளிச் செய்த திருக்குறள் மூலமும் உரையும். சிந்தாதிரிப்பேட்டை: சண்முகவிலாச அச்சுக்கூடம்.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.S

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Authors 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License